உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாலபே, பிட்டுகல, கடுவலை வீதி, மெத்சிரி மாவத்தை, இல. 160/6/4 இல் தற்பொழுது வசிக்கும் மல்லவாராச்சிகே பிரியன்கர ஜோசப் பெரேரா ஆகிய என்னால் நுகேகொடை கங்கொடவில, ஸ்ரீ சிரித மாவத்தை, சோரத்த டெர்ரஸ், இல. 33/6ஏ இலுள்ள ஜே. என்பி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் இற்கு வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு கொல்வின் கஜவீர பெரேரா என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 01.12.2001 ஆந் திகதியிடப்பட்ட அட்டோர்னி தத்துவ இல. 1540 இரத்துச் செய்யப்படுகின்றது. செல்லுபடியாததாக்கப்படுகின்றது. என்பதையும் எவ்வகையிலேனும் மேற்படி கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் இலங்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பிரியன்கர ஜோசப் பெரேரா.

7-23

அட்டோனி பத்திரம் இரத்துச் செய்யும் அறிவித்தல்

பிரசித்த நொத்தாரிசு பி. விஜயரத்தனவின் 19.06.2000 ஆந் திகதியுடைய இலக்கம் 257 மூலம் எதிரிசிங்க முதியான்சலாகே தினசிரி திலக் எதிரிசிங்க மற்றும் சேனாதீர ஏவாகே தீபா தயாணி விக்ரமரத்ன ஆகிய எங்களால் இல. எச்./டீ./4 பொலிஸ் வீட்டு தொகுதியில் கிருலப்பனையில் வசிக்கும் கீதா சான்தனி லியனகேக்கு கொடுக்கப்பட்ட அட்டோனி பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டதாக எல்லோருக்கும் அறிவிக்கிறேன்.

எதிரிசிங்க முதியன்சலாகே தினசிரி
திலக் எதிரிசிங்க மற்றும் சேனாதிர
ஏவாகே தீபா தயாணி விக்ரமரத்ன.

7- 150

ஏல விற்பனைகள்

மக்கள் வங்கி - குருநாகல் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

குருநாகல் மாவட்டம், மெஹிஎல்ல கிராமத்தில், யங்கஹபிட்டிய சந்திக்கு அருகில் அமைந்துள்ள கோவமுல்லேஹேன தற்போது தோட்டம் என்ற காணிக்கு அளந்து தயாரிக்கப்பட்ட 509A ஆம் இலக்க 1995.06.03 ஆந் திகதியுடைய வரைபடத்தின் 02 ஆம் இலக்க பரப்பளவு, (ஏ00, றூ01, பே10) விஸ்தீரணமுள்ள காணியும், அதனுள் அமைந்துள்ள பெறுமதியான வீடு, நெல் ஆலை, நெல் காய்ச்சும் கமத்தை, தண்ணீர் தாங்கி உட்பட அனைத்தும் அடங்கலாக, மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2004.07.16 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2003.11.07 ஆந் திகதி இலங்கை அரசின் வர்த்தமானியையும், 2004.03.19 ஆந் திகதி டெய்லி நியூஸ், 2004.03.19 ஆம் திகதிய தினமின, 2004.03.19 ஆந் திகதிய தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்துக்குச் செல்லும் பாதை.- குருநாகல் தம்புள்ளைப் பாதையில் 02 மைல் அளவு சென்று யங்கஹபிட்டிய சந்தியால் அலகொலதெனிய செல்லும் பாதையில் 1 1/2 மைல் அளவு சென்றவுடன் அலகொலதெனிய கிராமம் அகப்படும் கிராம சபைப் பாதையருகே வலது பக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

கொடுப்பனவு செய்யும் விதம்.- ஏல விற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

(1) தாம் வாங்கிய விலையின் 10% த்தையும்,
(2) உள்ளூராட்சி அதிகார சபையினதும், பிரதேச சபையினதும் 1% வரியையும்,
(3) ஏல விற்பனையாளரின் பங்காக ஏல விற்பனை தொகையின் 2 1/2% கமிசனையும்,
(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500ஐயும்,
(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும்,
(6) விற்பனைச் சான்றிதலுக்கான முத்திரைக் கட்டணத்தையும்.
(7) விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% வீதப் பங்கு பணத்தை ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளர்" இடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 037-2222453, பெக்ஸ் : 037-2222338.

உரிமைப் பத்திரம், மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும், திருப்பிச் செலுத்தாமலிருக்கவும், மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல,
(சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர், மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்,

தொலைபேசி : 037-20062

7-38